முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1270

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.03.2023, புதன்கிழமை

1. ஞானசக்தியே அரங்கா வாழ்க
ஞானிகள் பலம்கொண்ட தேசிகா வாழ்க
வானவர்கள் போற்றுகின்ற வள்ளலே வாழ்க
வாழும் ஞானியே வாழ்கவாழ்க எனக்கூறி
2. கூறியே சுப்ரமணியர் யானும்
குறையிலா ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 08 ம் நாள், 22.03.2023, புதன்கிழமை)
குருராஜன் உந்தனுக்கு அருளுவேன்
பெருமைபட அரங்கனால் இந்த கலியுகம் பெரும்பேறு அடைவது உறுதிஉறுதி
3. உறுதி தந்து அரங்கன் தருகின்ற உத்திரவாதமான
உயிர்கொலை நீக்கி மக்கள் வாழ உண்டான சன்மார்க்க நெறியே
நெறியே இந்த உலகத்தை மீட்டு
நிலவுலகில் ஞானவான்கள் நிறைந்த சூழலாக
4. ஆகவே மாற்றி இனிதே
அனைவருக்கும் ஞானியாகும் வாய்ப்பு தந்து
யுகமாற்றமாக ஞானயுகமாற்றம்
உயர்வாக இந்த பேருலகம் அடையக்கூடும்
5. கூடவே அற்புதத்தை நடத்துகின்ற அரங்கனே
குவலயத்தில் சிறந்த ஞானி
நாடெங்கிலும் அரங்கன் நாமஜெபம் பரவ
ஞானவான்கள் படை இன்னும் அதிகமாகி
6. ஆகியே உலகோர்க்கு இலகுவாக
அரங்கன் வழி வருகின்ற உபதேசம்
உபதேசம் பெரும் மாற்றமாக
உலகமெல்லாம் சைவநெறி திழைத்து
7. திழைத்துமே அரங்கன் வழி தர்மம் பரவி
தேசமெல்லாம் ஞானவான்கள் நிறைந்த சபையாக
சபைகூடி ஞானத் தலைமையாக
சகலருக்கும் எல்லா வளமும் கிட்டுகின்ற
8. அபயமென ஆறுமுகன் யான் இறங்கி
அருளுகின்ற ஆற்றல் மிக்க
ஞானஆட்சிக்காலமாக உலகம் மாற்றம் பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–